

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பராமரிப்பு, மற்றும் செயல்பாடுகள் குறித்து சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், சர்க்கரைத்துறை இயக்குநர் டி.அன்பழகன், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்பிரமணி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காய்த்ரி, பாலக்கோடு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளனர்.

### வழக்கில் உச்சநீதி மன்றத்தில் என்ன தீர்ப்பு வருகிறதோ- அதன்படி

# தமிழகத்தில் மணல் எடுப்பது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்கும்!

### புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, மே 13 -

புதுக்கோட்டையில் தனியார் பள்ளி மற்றும் கல்லூரி மெகா அறக்கட்டளை ஆகியவை இணைந்து புதுக்கோட்டை தமிழ்நாடு கனிம வளங்கள் மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில் மற்றும் அந்த நிறுவனங்களில் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர் .

கவிநாடு பெரிய கண்மாய் என்பது 1200 ஏக்கர் பரப்பளவில் ஆனது. கடந்த காலங்களில் இங்கு தேக்கி வைக்கப்பட்ட நீர் தான் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது தற்போது ஏழு மாவட்ட விவசாயிகளின் கனவு திட்டமான காவேரி வைகை குண்டாறு இணைப்பு திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு பெரிய கண்மாயில் காவேரி நீரை சேமித்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது



இந்த நிலையில் தற்போது தமிழ்நாடு பெரிய கண்மாய் தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டு குறுங்காடுகள் அமைக்கும் பணி அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது.

இதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி கனிமவள கொள்ளை தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற விசாரணைக்கு முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம் காணொளி காட்சி மூலமாகவும் ஆஜராகலாம் விசாரணை உண்மை தன்மை குறித்து நீதிமன்றத்தில் தெரிவிக்கலாம். எந்த விதமான கட்டுப்பாடும் அச்சுறுத்தலும் அவருக்கு எந்த தரப்பில் இருந்தும் கொடுப்பதற்கு அரசு அனுமதிக்காது.

அச்சமின்றி அவர் நீதி மன்றத்தில் தன்னுடைய விசாரணை அறிக்கை குறித்து கூறலாம். கட்டுமான பொருட்களான ஜல்லி எம்சாண்ட் பிசாண்ட் ஆகியவை நீதி மன்ற தீர்ப்புப்படி தான் தற்போது உயர்த்தப்பட்டு குறைக்கப்பட்டுள்ளது . இது பொது மக்களுக்கான அரசு வாய்ப்பு இருந்தால் மீண்டும் குறைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் பொருட்கள் விலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் விலை இருந்தால் மீண்டும் குறைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் மக்களுக்காக தான் இந்தஅரசு உள்ளது.

கடந்தசிலதினங்களுக்கு முன்பு கனிம வளங்கள் துறைக்கு நான் பொறுப்பேற்ற பிறகு அதிகாரிகளை அழைத்து முதலில் கூட்டத்தை நடத்தி விலை குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆய்வு செய்து செய்துள்ளேன் மீண்டும் தமிழகத்தில் மணல் எடுப்பது தொடர்பாக உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதால் வழக்கில் என்ன தீர்ப்பு வருகிறதோ அதன்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.

2026 திராவிட மாடல் 2.0 ஆட்சி நடைபெற உள்ளது.

2.0 எவ்வாறு நடைபெறப் போகிறது என்பது குறித்து ஏற்கனவே நாங்கள் திட்டமிட்டு இருக்கிறோம்.

வெற்றிகரமாக ஆட்சி நடத்துவதை மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள்.

தற்போதைய ஆட்சி மீது பொதுமக்களுக்கு அதிருப்தி கிடையாது.

ஒரு சிலர் அதிருப்தி இருப்பது போன்று விளம்பரப்படுத்தி வருகிறார்கள்

கள நிலவரத்தை பார்க்கின்றபோது எந்த விதமான அதிருப்தியும் இந்த ஆட்சிக்கு கிடையாது அதிருப்திக்கான எந்த வாய்ப்பும் நாங்கள் தரவில்லை.

தமிழகத்தில் இருக்கும் யாரும் பாகிஸ்தானை ஆதரிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற நிறுவனர்

# பாவலர் மீனாட்சிசுந்தரம் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

### மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் வேண்டுகோள்!

சென்னை, மே 13 -

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் நா.சண்முகநாதன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிறுவனர், ஆசிரியர் இனக் காவலர் பாவலர் மீனாட்சி சுந்தரம் அவர்களின் நினைவு நாளான 14.5.25 அன்று ஆசிரியர் மன்ற மாநில,மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்கள், என் உயிரினும் மேலானஆசிரியர் மன்ற உறவுகள் அனைவரும் மாவட்ட, மாநகர, நகர,ஒன்றிய,சரக மற்றும் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் நினைவுநாள் நிகழ்வுகளை நடத்தி புகழ் வணக்கம் செலுத்திடுமாறும் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பாவலர் அவர்கள் ஆசிரியர் நலன், மாணவர் நலன், சமுதாய நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் தொண்டுகள், செய்த உதவிகள்,



அவர் ஆற்றிய உரைகள், எழுத்துக்கள், திருவாரூர் மருத்துவக் கல்லூரிக்கு அளித்திட்ட உடல்கொடை போன்றவைகளின் வழியில் ஐயா அவர்கள் உருவாக்கிய இயக்கம் அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் பயணிக்கிறது.

நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பாவலர் அவர்கள் தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த ஆசிரியர் அரசு ஊழியர்களின் வாழ்விலும் நிலைத்து நிற்கிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வாழ்விலும் தாழ்விலும் ஒரே கொள்கைக்கு சொந்தக்காரர் தம்பி மீனாட்சி சுந்தரம் என்று பாராட்டப்பட்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப்படை என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட அமைப்பாகும்.அவருடைய நினைவு நாளில் பாவலரின் புகழினை போற்றுவோம் புகழஞ்சலி செலுத்துவோம்.

ஆசிரியர் மன்றத்தின் பச்சை வண்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க செய்திடுங்கள்!

பாவலர் ஐயா அவர்களின் திருஉருவப் படம் திறப்புச் செய்து மலர் வணக்கம்- புகழ் வணக்கம் செலுத்துங்கள்! பாவலர் ஐயா அவர்களின் புகழ் பாடுங்கள்! பரப்புங்கள்! போற்றுங்கள்!

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர்கள் கே.என்.நேரு – முனைவர் கோவி.செழியன் முன்னிலை!

# தஞ்சை மத்திய மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் , மே 13 -

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 2026 சட்டமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாளை (14.5.2025-புதன்கிழமை) காலை 10 மணியளவில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி. செழியன் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் தொகுதி பார்வையாளர் ஏ.கே.எஸ்.விஜயன் பரணி இ.ஏ.கார்த்திகேயன், நாகை கோ.மனோகரன் ஆகியோர் பங்குபெறும் சட்டமன்றத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள் 2026 சட்டமன்றத் தேர்தல், கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம். எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார் .




சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர கழகம் சார்பில் கழக அரசின் சாதனைகள் விளக்கம் பொதுக்கூட்டம் நகர செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு துணை தலைவர் பி.டி. அரசகுமார் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இதில் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவராமன், நகர அவைத் தலைவர் ராமசாமி, பொருளாளர் இளவரசு, விஜயகுமார், சக்திவேல், புஷ்பாவதி, சித்ரா, செல்வகுமார், சுப்பிரமணி , அசோகன், புலித்தேவன், செந்தில்குமார், சக்தி, வெங்கடேஷ், மாரிமுத்து, தியாகராஜன் ,மணிபாரதி, அழகேசன், பாண்டியன், மனோகர், சாலமன், மற்றும் நகர நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# என் அன்னையின் மறைவுத் துயரத்துக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி!

என் அன்னையின்
மறைவுத் துயரத்துக்கு
ஆறுதல் கூறிய
தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின்,
உச்ச நீதிமன்ற உயர்
நீதிமன்ற நீதியரசர்கள்,
துணை முதலமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்,
மலேசிய எம்.பி
டத்தோரீ சரவணன்

இறுதிச் சடங்கில்
இறுதிவரை உடன் இருந்த
அமைச்சர்கள் ஐ.பெரியசாமி,
அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி,
நாடாளுமன்ற
முன்னாள் உறுப்பினர்
கம்பம் செல்வேந்திரன்,
ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ,
சரவணகுமார் எம்.எல்.ஏ,
பி.ஆர்.பாண்டியன்

தொலைபேசியில் அழைத்து
ஆறுதல் சொன்ன
அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

சகோதரர் ரஜினிகாந்த்
உள்ளிட்ட கலையுலக அன்பர்கள்

ஆசிரியர் கி.வீரமணி,
வைகோ, திருமாவளவன்,
சீமான் உள்ளிட்ட தலைவர்கள்

இரங்கல் தெரிவித்த
ப.சிதம்பரம் எம்.பி
ஓ.பன்னீர் செல்வம்,
செல்வப் பெருந்தகை,
உள்ளிட்ட அரசியல் தலைவர்கள்

ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ்
அதிகாரிகள்

வெற்றித் தமிழர் பேரவைச் சொந்தங்கள்,
உலகத் தமிழ் அன்பர்கள்
உறவினர்கள், நண்பர்கள்,
ஊடக உறவுகள் அனைவருக்கும்
நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்

என் துன்பத்தைப்
பகிர்ந்துகொண்ட
உங்கள் அன்பை மறவேன்

**கவிப்பேரரசு**
**வைரமுத்து**



### உதகையில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

உதகை, மே 13 –

நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு அவர்கள் மற்றும் தமிழ்நாடு தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியா ளர் அணி செயலாளரும், தலைமை கழக பேச்சாளருமான SKP. கருணாநிதி அவர்கள் அரசின் நலத்திட்டங்களை பட்டியலிட்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கே. போஜன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தொரை, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில், வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் தங்கராஜ், ஒன்றிய பொருளாளர் செல்வன், சோலூர் பேரூராட்சி தலைவர் கௌரி, சோலூர் பேரூராட்சி செயலாளர் பிரகாஷ் குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராமச்சந்திரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் விஸ்வநாதன், விவேக், சோலூர் மூர்த்தி, தூனேரி ஊராட்சி அணிக்கொரை செந்தில், கடநாடு பிரேம்குமார், எப்பநாடு ஊராட்சி மனோகரன், நந்தகுமார், சேட், உயிலட்டி பால்ராஜ், கணேசன், பரசுராமன், ராமகிருஷ்ணன், சிவபசவன்.

இறுதியில் மாவட்ட பிரதிநிதி பசுராஜ் அவர்கள் நன்றியுரை கூறினார்.




ஈஸ்டர் பண்டிகை முன்னிட்டு குன்னூர் குட் சாமாரிட்டன் கிளப் நடத்தும் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்பின் அறுசுவை அசைவ விருந்து வழங்கும் நிகழ்ச்சி இதில் அரசு தலைமை கொறடா க. ராமச்சந்திரன் நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் கே. எம். ராஜு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஆர். பி. பரமேஷ் குமார், போஜன் எம். ராமசாமி , பீமன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் . இறுதியில் சுரேஷ் நன்றி தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.கே. சுப்பையா

### மே 13 (1996)



பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், 1971ஆம் ஆண்டு, சட்டப்பேரவையில் 'தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு இடங்களை, அவர்களுக்கே சொந்தமாக்கிட வேண்டும்' என முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அக்கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து 'பொதுவுடைமை இயக்கத்தில் போராடி, சாணிப் பாலுக்கும், சாட்டையடிக்கும் ஆளானோம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு துளி மையினால் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கினார் எனக்கூறி அந்த இயக்கத்திலிருந்து விலகி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டார்.

1978 முதல் 1996 வரை கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**